# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report
# 2012

# රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
# அரச கணக்குகள் திணைக்களம்
# Department of State Accounts

| | | |
|---|---|---|
| මහා භාණ්ඩාගාරය | பொதுத் திறைசேரி | General Treasury |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo -01 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **1** | **அறிமுகம்** | 1 |
| **2** | **மீளாய்வு** | 2 |
| **3** | **கணக்கு சேவை பிரிவு** | |
| 3.1 | நிதி கூற்றுக்களை தயாரித்தல் | 3 |
| 3.2 | கிரவுன் முகவர்களினூடாக பொருட்கள் கொள்வளவு செய்வதனை கூட்டிணைக்கும் நடவடிக்கை | 3 |
| 3.3 | பொதுவைப்பு கணக்கு கண்காணிப்பு மற்றும் தொழிற்பாடு | 4 |
| 3.4 | செயற்படாத பிரதான கணக்கு பேரேட்டின் நிலுவை கணக்குகளை தொகுதியிலிருந்து அகற்றுதல் | 4 |
| 3.5 | பிரதான பேரேட்டை திறத்தலும் அது தொடர்பான கணக்கு நடவடிக்கைகளை தொழிற்படுத்தலும் | 5 |
| 3.6 | திறைசேரியின் பொருட்டு அரசாங்க கணக்குகள் செயற்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தல் | 5 |
| 3.7 | பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் தொடர்புடைய கணக்கு ஆலோசனைகளை வழங்குதல் | 5 |
| **4** | **கணக்கு மற்றும் அறிக்கையிடல் பிரிவு** | |
| 4.1 | மாதாந்த கணக்கு சுருக்கத்தை சேகரித்தல | 6 |
| 4.2 | ஆசிய பிராந்தியத்தில் அரசாங்க கணக்கு அமைப்புகளின் சங்கம | 6 |
| **5** | **முகாமைத்துவ தகவல் மற்றும் அரசாங்க நிதிப்புள்ளி விபரவியல் பிரிவு** | |
| 5.1 | அரசாங்க நிதி புள்ளிவிபரவியல் தரவுகளை சேகரித்தல் மற்றும் தயாரித்தல் | 7 |
| 5.2 | அரசாங்க நிதிப் புள்ளிவிபர தரவுகளை வெளியிடுதல் | 7 |
| **6** | **முறைமை, பயிற்சி மற்றும் நிர்வாக பிரிவு** | |
| 6.1 | அரசாகங்க கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்தல், அது தொடர்பான கணக்கு பதவியினரை பயிற்றுவித்தல் | 8 |
| 6.2 | பல்வேறு முற்பண கணக்குகளை தொழிற்படுத்துதல் | 10 |
| **7** | **நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கை** | |
| 7.1 | பதவியணியினர் | 11 |
| 7.2 | நிறுவன ஒழுங்கமைப்பு அட்டவணை | 13 |
| 7.3 | பௌதீக வள அபிவிருத்தி | 14 |
| 7.4 | திறன் விருத்தி மற்றும் அறிவு விருத்தி | 15 |
| **8** | **நிதித் தகவல்** | |
| 8.1 | ஒதுக்கீட்டு கணக்குளை தயாரித்தல் | 17 |
| 8.2 | முற்பணம் “ பீ “ கணக்கு சம்பந்தமான நடவடிக்கை | 17 |
| 8.3 | நிதி செயலாற்றுகை | 17 |

# அரச கணக்குகள் திணைக்களம்

## 1. அறிமுகம்

இலங்கை பாராளுமன்றத்தினால் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலமும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவுப் பிரிவுகள், மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாண சபைகள் ஆகியவற்றின் பணிகளுக்காக ஒதுக்கிக் கொடுக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம், அரச வருமானங்கள், செலவுகள், முற்பணங்கள் மற்றும் வைப்பு கணக்குகளின் கணக்கு நிலைமைகள் சம்பந்தமாக மையப்படுத்தி கணக்கு வைத்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பன இந்த திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். அதன் பொருட்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவுப் பிரிவுகள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள் அனைத்திலிருந்தும் மாதாந்தம் பெறப்படுகின்ற வருமான மற்றும் செலவினத் தரவுகளை ஒன்று சேர்த்து பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரவு, செலவு ஏற்பாடுகளின் வரையறையின் கீழ், மையப்படுத்தப்பட்ட கணக்கு வைப்பும் அறிக்கையிடுதலும் மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று நிறுவனரீதியாக திறைசேரி மட்டத்தில் கணக்கு முறைகளை உயர் முகாமைத்துவத்திற்கு தீர்மானம் எடுப்பதற்கு இலகுவாக்கும் தகவல்களை வழங்குவதற்காக தொடர்ந்தும் வினைத்திறன் மிக்க கணினிமயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டமொன்றை நோக்கி தொழிற்படுத்துவது இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பகுப்பாய்வு நடவடிக்கை மற்றும் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக மேற்குறிப்பிட்ட விதமாக தயாரிக்கப்படுகின்ற அரச வருமானங்கள் மற்றும் செலவுகள் பற்றிய தரவுகளை உள்ளடக்கிய நிதி கூற்றுக்கள் மற்றும் அரசாங்க நிதித் தரவுகள் என்பன இலங்கை பாராளுமன்றம், அந்தந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள், இலங்கை மத்திய வங்கி உட்பட ஏனைய நிறுவனங்களுக்கும் பயனுடையதாக இருக்கும் விதமாக நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையுடன் வெளிப்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக நிதி ஒழுங்கு விதி 430 இல் ஏற்படுத்தப்பட்டுள்ள திறைசேரி புத்தகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற ஏனைய நிதித் தகவல்களை வெளிப்படுத்துதல் மற்றும் அவற்றை கணக்காய்விற்காக சமர்ப்பித்தலும் இத் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

## 2. மீளாய்வு

2010 - 2015 இரண்டாவது ஐந்தாண்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 2010 -2012 மூன்றாண்டு அரச நிதிச் செயற்பாட்டின் வரை சட்டத்தின் மூன்றாவது வருடமான 2012 ஆம் ஆண்டில் அரச நிதித் தகவல், அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்காகவும் இணக்கப்பாடு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றை மேம்படுத்துவதற்காகவும் சகல தரப்பினருக்காகவும் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதனை மேலும் வினைத்திறன் உடையதாக மேற்கொள்ளும் பொருட்டு இந்த வருடத்தில் New CIGAS அறிமுகப்படுத்தல், காணி மற்றும் கட்டடங்கள் மதிப்பீடு செய்வதனை ஆரம்பித்தல், கணக்கு அறிக்கைகளை உரிய தினத்திற்கு தயரித்தல், மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளை உரிய தினத்திற்கு சமர்ப்பித்தல், கணக்கு தகவல்களை மாதாந்தம், காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்தம் என்ற அடிப்படையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கும் ஏனைய பல்வேறு திணைக்களங்களுக்கும் தேவையான தகவல்களை திட்டமிட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருந்தது.

இந்தப் பணியின் போது அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் உரிய கணக்கு அலகுகளின் மூலம் தொடர்புடைய தரவுகளை அசைவுக்குத் தேவையான இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், கணக்குகளின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் தொடர்புடைய தகவல்களை வழங்குதல், வரவு செலவு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் முன்னேற்ற மீளாய்வுக்காகத் தேவைப்படும் கால அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக நிதியாண்டின் இறுதியில் கணக்குகளை செலுத்துதல் சம்பந்தமாக தேவைப்படும் வழிகாட்டல்களை சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்குவதன் மூலம் தற்போது இருக்கும் நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கியதாக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளை தயாரிப்பதற்கு தேவைப்படும் ஆலோசனைகளை வழங்குதல், அதன் பிரகாரம் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் வருமானக் கணக்குகளை தயாரிப்பதற்காக தேவைப்படும் ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் கணக்காய்வாளர் நாயகத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட குடியரசுக் கணக்கு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கு உட்படுத்தக் கூடியதாக இருந்தது. உரிய தினங்களுக்கு இணங்க அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு என்பவற்றை தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குடியரசின் வருடாந்த வருமானம், செலவு அரச கடன்கள் உள்ளடங்கியதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க 2012 குடியரசுக் கணக்கை குறிப்பிட்ட கால எல்லைக்குள் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புதல், அதன் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குத் தகவல்களை அது தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற சகல தரப்பினர் மீதும் தகவலுக்காக நிதித் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவது விசேட அம்சமாகும்.

மேற்குறிப்பிட்ட பொது மீளாய்வு தொடர்பாக திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் பிரகாரம் பக்க இல 19 தொடக்கம் 24 வரையில் காட்டப்பட்டுள்ளது.

## 3. கணக்கு சேவைப் பிரிவு

### 3.1 நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல்

2012 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வைப்புக் கணக்கு மற்றும் முற்பணம் "பீ" கணக்குகளைத் தயாரித்தல் சம்பந்தமாக 3 அரச கணக்குகள் சுற்றறிக்கைகளும், 2013 ஆம் ஆண்டு முதல் சேர்த்தல் அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு தொடர்புடைய ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கையும் இந்த வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக செலவினத் தலைப்பு 202 மீண்டுவரும் மூலதனச் செலவுகளின் மதிப்பீட்டுத் தொகை உண்மைச் செலவு அடங்கிய 2011 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. விசேடமாக இலங்கை அரசாங்கத்தின் 2012 ஆம் ஆண்டுக்குரிய நிதிச் செயலாற்றுகை, நிதி நிலைமை, பண வரவுகள் அறிக்கை மற்றும் தேரிய சொத்துரிமை மாற்றமடையும் கூற்றுக்கள் உரிய தினத்திற்கு கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும், அது சம்பந்தமான உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை வெளிப்படுத்தும் போது கணக்காய்வு அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ளல். 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 13(1) பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்குகளை பிரசித்தப்படுத்துவது இந்த வருடத்தின் உரிய தினத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.2 கிரவுண் முகவர்களினூடாக பொருட்கள் கொள்வனவு செய்வதனை ஊக்குவிக்கும் நடவடிக்கை

சுகாதார அமைச்சு மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் தொடர்பாகத் தேவைப்படும் மருந்துப் பொருட்களையும் அச்சுக் கடதாசிகளையும் கிரவுண் முகவர்களினூடாகப் பெறுவதற்குத் தேவையான நேரடித் தலையீடு இந்தத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில். அதன் கீழ் 2012 ஆம் ஆண்டிற்குள் சுகாதார அமைச்சு தொடர்பாக இன்டென்டு 20 பொருட்களை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பெறுமதி ரூபா 92 மில்லியன் ஆகும்.

அதேபோன்று ஆட்பதிவுத் திணைக்களம் சம்பந்தமாக ரூபா 31 மில்லியன் பெறுமதியான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 3.3 பொதுவைப்புக் கணக்குகளின் கண்காணிப்பு மற்றும் தொழிற்பாடு

தற்போது வைப்பு பேரேட்டில் வைப்புக் கணக்குகள் 15 தொகுதிகளின் கீழ் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வைப்புத் தொகைகளினிடையே 2012 ஆம் ஆண்டின் மூன்று வைப்புத் தொகைகளின் கீழ் 62 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்குகளைத் திறக்கும் போது 6000/6 தொகுதியாகிய மிகை நிதித் தொகுதியின் கீழ் 1 கணக்கும், 6000/10 தொகுதியாகிய வெளிநாட்டு உதவி நன்கொடைத் தொகுதியின் கீழ் 10 கணக்குகளும் 6000/11 தொகுதியின் கீழ் 2011 ஆம் ஆண்டின் செலவினத் தலைப்புகளின் எஞ்சிய ஒதுக்கீடு நிதி ஒழுங்கு விதி 215(3) பணிகள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டின் செலவுகளை மேற்கொள்வதற்காக 51 கணக்குகளும் பொது வைப்புப் பேரேட்டில் புதிதாக திறக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டின் 8,300 தொகுதியின் கீழ் பிரதான பேரேட்டில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறும் பொருட்டு 36 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பெருந் தெருக்கள் மற்றும் பாலம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 10 இற்கும், மின்சார அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 6 இற்கும், நீர் வழங்கல் மற்றும் சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 7 இற்கும், கல்வியை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் 2 இற்கும், சுகாதார சேவைக்கான செயற்திட்டங்கள் 3 இற்கும், நீர்ப்பாசன செயற்திட்டம் 1 இற்கும், துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டம் 1 இற்கும், கிராம மற்றும் நகர அபிவருத்தி செயற்திட்டம் 6 இற்கும், இந்த நிதி செலவளிக்கப்பட்டுள்ளது.

## 3.4 செயற்படாத பிரதான கணக்குகளின் பேரேட்டு நிலுவை கணக்குத் தொகுதியிலிருந்து அகற்றுதல்

6000/3 மற்றும் 6003 பழைய தொகுதியின் செயற்படாத நிலைமையிலிருக்கின்ற சுமார் 88 கணக்குகள் திறைசேரியின் கணனித் தொகுதியிலிருந்து 2012 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டுள்ளன. பழைய வைப்புக் கணக்கில் இருந்த அடையாளம் காணப்பட்ட நிலுவைகள் புதிய வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு எஞ்சிய நிலுவைகள் அரசாங்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதனால் செயற்படாத நிலையிலிருந்த இந்த வகையான வைப்புக் கணக்குகள் மற்றும் 6000/10 தொகுதியின் கீழ் இருந்த வெளிநாட்டு நன்கொடைக் கணக்கு அந்த செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் அந்தக் கணக்கில் பூச்சியப் பெறுமதியினைக் காட்டியமை மற்றும் இந்தக் கணக்கின் ஊடாக எதிர்காலத்தில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறாதெனவும் 6000/10 தொகுதியின் 91 கணக்குகளும் திறைசேரி கணனித் தொகுதியிலிருந்து அகற்றப்பட்டு இந்த நடவடிக்கை எடுக்ககப்பட்டுள்ளது. திறைசேரியில் பேணப்பட்டுவரும் பிரதான பேரேடு 70 தொடர்பாக காலாண்டு ரீதியான ஓப்பீட்டு வருடத்தினுள் முடிக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன்

மூலம் பிரதான பேரேட்டு நிலுவைகள் திணைக்களப் புத்தகங்களுடன் ஒப்பிடப்படுவதாக உறுதிப்படுத்தப்படுகின்றது. வருடத்தினுள் புதிய பிரதான பேரேட்டுக் கணக்குகள் 3 ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 3.5 பிரதான பேரேட்டைத் திறத்தல் மற்றும் அது தொடர்பான கணக்கு நடவடிக்கைகளை தொழிற்படுத்துதல்

2012 ஆம் ஆண்டினுள் 54 அமைச்சுக்கள், 92 திணைக்களங்கள், 22 விசேட செலவு அலகுகள் மற்றும் 25 மாவட்டச் செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளைத் தொழிற்படுத்துதல் மற்றும் அதற்கான கணக்கீட்டுச் சேவை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், மேலதிக ஒதுக்கீடு வழங்குதல் சம்பந்தமாக 813 அனுமதிப் பத்திரங்களை நிதி ஒழுங்கு விதி 66 இடமாற்றப் பத்திரம் 1,721, நிதி ஒழுங்கு விதி 69 இன் கீழ் 167 ஒதுக்கீட்டு மாற்றத்திற்காக கணக்கு வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.6 திறைசேரியின் பொருட்டு அரச கணக்குகள் செயற்குழுவை பிரதிநிதிப்படுத்தல்

2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அரசாங்கக் கணக்கு செயற்குழுக் கூட்ட அமர்வுகள் 52 இற்காக திணைக்களத்தை பிரதிநிதிப்படுத்தி, மேற்கூறிய அமர்வுகளில் பங்குபற்றி கணக்கு செயற்குழுவுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் மிகவும் வினைத்திறனாகவும், செயற்திறனாகவும் நிதி ஒழுங்கொன்றை அரச கணக்குப் பகுதிக்குள் பேணுவதற்கு தேவையான தலையீடு வழங்கப்படுகின்றது.

## 3.7 பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் தொடர்புடைய கணக்கு ஆலோசனைகளை வழங்குதல்

எரிபொருள் முற்பணம் வழங்குவது சம்பந்தமாக பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அமைதி பேணும் கடமைக்காக வழங்கப்படுகின்ற இடைக்கால இலங்கை ஆயுதப்படையிடமிருந்து பத்தரமுல்லை ஆள் அடையாளச் செயலகத்தில் நிர்மாணிப்பது சம்பந்தமாக செலவு கணக்கு வைத்தல் சம்பந்தமாகவும் வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிக்காகவும் மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவது பற்றி அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு குத்தகை முறையின் கீழ் பெற்றுக் கொள்ளப்படுகின்ற வாகனங்கள் தொடர்பான வட்டியை செலுத்துவது பற்றி தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திடமிருந்து மாதாந்த கணக்கு சுருக்கத்தை சமர்ப்பிப்பது சம்பந்தமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலமும் வேளை முற்பணங்கள் கணக்கு வைத்தமை சம்பந்தமாக விவசாய திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான பிரச்சினை சம்பந்தமாக தொடர்புடைய தரப்பினர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதன் மூலம் கணக்கு வைத்தலை மேலும் பலப்படுத்தக்கூடியதாக இருந்தது.

## 4. கணக்கு மற்றும் அறிக்கையிடல் பிரிவு

### 4.1 மாதாந்தக் கணக்கு சுருக்ககத்தை சேகரித்தல்

2012 ஆம் ஆண்டில் 54 அமைச்சுக்கள், 25 மாவட்டச் செயலகங்கள் 125 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மாதாந்த கணக்கு சுருக்கம் சேகரிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினதும் குறைநிரப்பு மதிப்பீட்டினதும் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுகளாக ஒதுக்ககப்பட்டிருந்த தொகை ரூபா 2,293,470,808,000 ஆகும். தொழிற்பாடுகளின் சிக்ககல் வாய்ந்த தன்மை, கொடுக்கல் வாங்கல் முறைகள் மற்றும் நிறுவனங்களின் திறன் போன்ற விடயங்கள் அடிப்படையில் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மாதாந்த கணக்குச் சுருக்கத்தை சமர்ப்பிக்க வேண்டிய இலக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் தொடர்பான மாதாந்த கணக்கு தரவுகளை செய்ய வேண்டிய திகதியைக் குறிப்பிட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பிப்பதற்கு தாமதித்த நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக வருடத்தின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட போதும், பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட நினைவூட்டல்கள் மூலம் வருடம் முடிவடையும் போது தொடர்புடைய நிறுவனத்தினால் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தலானது மகிழ்ச்சிகரமான மட்டத்தில் அடையப்பெற்றதாக 08 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் திறைசேரியின் கணனி அச்சிடல் இணையத்தளத்திற்கு வெளியிடப்பட்டுள்ள திகதிகளின் மூலம் தெளிவாகின்றது. அதன் பிரகாரம் அந்தந்த மாதத்தின் உண்மை கணக்கு தகவல்களை முன்வரும் மாதத்தில் நடுப்பகுதியாகும் போது வெளியிடக் கூடியதாக இருந்ததென்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சேகரிக்கப்பட்ட செலவு மற்றும் வருமானத் தகவல்களை தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுப்பதற்காக அந்த தகவல்கள் இலங்கை மத்திய வங்கி, புள்ளிவிபரவியல் திணைக்களம் அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம், திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 4.2 ஆசிய வலய அரச கணக்குள் அமைப்புகளின் சங்கம்

ஆசிய வலய அரச கணக்குள் அமைப்புகளின் சங்கத்தை (AGAOA) தாபிப்பதற்கு முன்னோடியாக இருந்து, அதன் ஆரம்ப உறுப்பினராகிய இலங்கை 2012 ஆம் ஆண்டினுள் இந்தச் சங்கத்தின் பொருளாளராக நடவடிக்கை மேற்கொண்ட அதேவேளையில், இந்தத் திணைக்களம் 2012 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரித்து உறுப்பு நாடுகளுக்கு சமர்ப்பித்துள்ளது. இந்த சங்கத்தின் பொதுச் சம்மேளனம் மற்றும் நிருவாக சபையின் கூட்டம் 2012 அம் ஆண்டு தொடர்பில்

நடத்தப்படாதிருந்த அதேவேளை 2012 ஆம் ஆண்டிலும் நிதிப் பொறுப்பை வகித்து வலய ரீதியில் திணைக்களத்தின் சேவை வியாபித்துள்ளது.

## 5. முகாமைத்துவ தகவல் மற்றும் அரச நிதிப் புள்ளிவிபரவியல் பிரிவு

### 5.1 அரச நிதிப் புள்ளிவிபரவியல் தரவுகளை சேகரித்தல் மற்றும் தாயாரித்தல்

மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு முதல் இந்த அலகு தாபிக்கப்பட்ட அதேவேளையில், அதன் மூலம் பொருளாதார பகுப்பாய்வுக்காக கணக்குகளில் காணப்படுகின்ற தகவல்களை அவ்வாறே பயன்படுத்தப்பட முடியாதபடியினால் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களின் பிரகாரம் அவை தயாரிக்கப்படுகின்றது. தற்போது இலங்கையில் பொருளாதார பகுப்பாய்வுகளுக்காக பயன்படுத்தப்படுவது 1986 ஆம் ஆண்டு அரச நிதிப் புள்ளிவிபரவியல் தரவுகளை தயாரித்த முறையிலே ஆகும். உலகின் புதிய போக்குகளைக் கவனத்திற் கொண்டு அந்தத் தரவுகளை சமர்ப்பிக்கும் முறைமை 2001 ஆம் ஆண்டு அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல் கையேட்டின் மூலம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் புதிய போக்குகளைக் கடைப்பிடித்து இலங்கையும் அரச நிதி தரவுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை இந்த வருடத்தில் மேற்கொண்டது.

### 5.2 அரச நிதிப் புள்ளிவிபரவியல் தரவுகளை வெளியிடுதல்

அதன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானம் அரசாங்ககத்தின் செலவு என்பவற்றை பொருளாதாரப் பகுப்பாய்விற்கு பொருந்தக்கூடிய விதத்தில் தயாரித்தல் மற்றும் அவற்றின் தேவையான விதத்தில் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதேபோன்று பல்வேறு தொழிற்பாடுகளின் பிரகாரம் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மற்றும் உண்மையான விதத்தில் செய்யப்பட்டிருந்த செலவுகள் பற்றிய தரவுகளைத் தயாரித்தல் மற்றும் அதனை முகாமைத்துவக் கொள்கைகளுக்காக சமர்ப்பித்தல், அரசாங்க வருமானத் தகவல்களை சேகரித்து பகுப்பாய்விற்கு உட்படுத்துவதை ஆரம்பிப்பதும் அரச முதலீட்டுச் செலவுகள், வரவு செலவு மதிப்பீட்டுடன் ஒப்பிட்டு அவற்றின் நிதி முன்னேற்ற மீளாய்வின் பொருட்டு தொடர்புடைய பிரிவுகளுக்கு அறிக்கையிடலும் மேற்கொள்ளப்படுகின்றது.

## 6. முறைமை, பயிற்சி மற்றும் நிருவாகப் பிரிவு

### 6.1 அரசாங்கக் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்துதல், அது தொடர்பாக கணக்குப் பதவியினருக்கு பயிற்சியளித்தல்

**6.1.1** அரசாங்க கணக்கீட்டு மென்பொருள் பற்றிய பயிற்சி விடயத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் WINDOWS அடிப்படை நிகழ்ச்சித் திட்டமொன்றாக நவீன மயப்படுத்தப்பட்ட புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் DOS அடிப்படை நிகழ்ச்சித் திட்டமாகவுள்ள GPS, WINDOWS அடிப்படை நிகழ்ச்சித் திட்டமாக நவீனமயப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் GPS மென்பொருள் மூலமாக மத்திய அரசாங்கத்திற்குரிய உத்தியோகத்தர்களின் சம்பளத் தகவல்களை மாதாந்தம் பெற்றுக் கொள்வதற்காக புதிய CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்குள் வசதிகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை அந்த நிகழ்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்துவதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் இந்தத் தகவல்களை பெற்றுக் கொள்ளும் முன்னேற்றம் தற்பொழுது அவதானிக்கப்பட்டுள்ளது.

**6.1.2** 2012 ஆம் ஆண்டின் 9 மாத காலத்தில் உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் திறைசேரி கணனி அச்சிடலை பிரபல்யப்படுத்தக் கூடிய விதத்தில் சகல அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் மாதாந்தக் கணக்குச் சுருக்கத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் பின்வரும் விதமாக அந்தந்த மாதத்தில் வருமான செலவுத் தகவல்கள் இணையத் தளத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

| மாதம் | திறைசேரி கணனி அச்சிடலை வெளிப்படுத்திய திகதி |
|---|---|
| சனவரி | 2012 பெப்ரவரி 15 |
| பெப்ரவரி | 2012 மார்ச் 13 |
| மார்ச் | 2012 ஏப்ரல் 18 |
| ஏப்ரல் | 2012 மே 23 |
| மே | 2012 ஜூன் 15 |
| ஜூன் | 2012 ஜூலை 13 |
| ஜூலை | 2012 ஆகஸ்ட் 20 |
| ஆகஸ்ட் | 2012 செப்டம்பர் 14 |
| செப்டம்பர் | 2012 ஒக்டோபர் 12 |
| ஒக்டோபர் | 2012 நவம்பர் 15 |
| நவம்பர் | 2012 டிசம்பர் 13 |
| டிசம்பர் | 2013 மார்ச் 15 |

**6.1.3** மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் CIGAS மற்றும் GPS பற்றி ஒருநாள் 18 கருத்தரங்குகள் நடாத்தப்பட்ட அதேவேளையில், அதற்காக சுமார் 1,000 உத்தியோகத்தர்கள் பங்கு பற்றினர். இதற்காக மாவட்ட செயலகங்கள் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கள் தொடர்பான உப அலுவலகங்களின் கணக்குப் பிரிவுக்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்ததர்கள் பங்குபற்றிய அதேவேளையில், வடக்கு பிரதேசங்களில் தமிழ் மொழியிலும் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**6.1.4** இந்த கருத்தரங்குகளின் மூலம் புதிய தொழில்னுட்பத்தைப் பயன்படுத்துதல், புதிய CIGAS நிகழ்ச்சித் திட்டத்தை தாபித்தல், அந்த நிகழ்ச்சித் திட்டங்களிலுள்ள நன்மைகள் மற்றும் மாவட்ட, பிரதேச கணக்கீட்டுப் அலகுகள் தொடர்பான பிரச்சினைகள் என்பன கலந்துரையாடப்பட்டன. மேலும் 2013 ஆம் ஆண்டிற்கான புதிய CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கிய இருவட்டுக்கள் சகல கணக்குப் பிாவுகளுக்கும் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்திற்குள் விநியோகிக்கப்பட்டன. CIGAS நிகழ்ச்சித் திட்டத்தை பயன்படுத்தப்படுபவர்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளடங்கக்கூடிய விதமாக அரச கணக்குத் திணைக்களத்தினால் தாயாரிக்கப்பட்ட பயிற்சி கையேட்டைப் பயன்படுத்தி அரச கணக்குகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலமாக அரச உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**6.1.5** மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளிலுள்ள சகல அமைச்சுக்களும் திணைக்களங்களும் பயன்படுத்துகின்ற கணனி மென்பொருள் (CIGAS மற்றும் PAYROLL) தொகுதியின் அபிவிருத்தி பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் இந்தப் பிரிவின் பொறுப்பாகும். அதன் பிரகாரம் அந்தத் தொகுதியைப் பேணுதல், தற்போதிருக்கும் சட்ட திட்டங்களின் பிரகாரம் கணக்குகளை வகைப்படுத்தல் மற்றும் கணக்குக் குறியீடுகளை நிர்மாணித்து கணக்கு அறிக்கைகளை பேணுவதற்காகவும் பிரதான கணக்குப் பிரிவிற்கு அவற்றை வழங்குவதற்கும் குறைந்த நேரத்தில் பிரதான கணக்கு அலகினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற கணக்கு தகவல்களின் செல்லுபடியாகும் தன்மையினை பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரியின் மூலம் அரச கணக்கு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு கணக்குகள் மற்றும் எண்ணியல் தகவல்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து கிடைக்கின்ற தரவுகளைப் பேணுகின்ற மத்திய கணக்கு தரவுத் தொகுதிக்கு தரவுகளை சேர்த்தல், ஆலோசனைகளை வழங்குதல் தரவுகளை செல்லுபடியாக்கல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிக்கு தரவுகளை மாற்றுதல் மற்றும் வழங்குதல், வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு மற்றும் அது தொடர்பான செலவுகள், முன்வரும் வருடத்திற்கான தேவைகள் வழங்குவதன் மூலம் விருத்தி

செய்யப்பட்ட கணக்கு முறையொன்றை பேணுவதற்கு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் உதவியாக இருக்கக்கூடிய விதமாக பயிற்சி கற்கை நெறிகளை மேற்கொள்ளல் மற்றும் தேவையான அறிவுரைகளையும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 6.2 பல்வேறு முற்பணக் கணக்குகள் தொழிற்படுத்துதல்

**6.2.1** முற்பணக் கணக்குளை தொழிற்படுத்துவதன் கீழ் இந்த வருடத்தில் திறைசேரி பல்வேறு முற்பணக் கணக்குகள் (25003) மற்றும் ஏனைய அரசாங்கங்களின் பொருட்டு கொடுப்பனவிற்கான முற்பணக் கணக்கு (25002) தொடர்பான இறுதிக்கணக்கு அறிக்கை நி.ஒ. 506 (1) மற்றும் 506 (2) இன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அதாவது 2013.03.27 ஆம் திகதி கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று திறைசேரியின் பல்வேறு முற்பணக் கணக்குகள் தொடர்பாக அறவிடப்படாதிருக்கின்ற பழைய நிலுவைகளை அறிவிடுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மீளாய்வு வருடத்திற்குள் கூட்டத்தொடர்கள் பல நடாத்தப்பட்ட அதேவேளையில் தொடர்புடைய மாவட்ட செயலாளர்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் கடிதங்களின் மூலம் இந்த நிலுவைகளை சரி செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் குறிப்பிடத்தக்க அளவு தொகையில் நிலுவைகள் சரி செய்யக்கூடியதாக இருந்தது. அந்தந்த மாவட்டச் செயலகங்கள் மூலம் சரி செய்யப்பட்ட கணக்கு நிலுவைகள் பின்வருமாறு

| கணக்கு இலக்கம் | மாவட்டச் செயலகம் | தீர்க்கப்பட்ட நிதி ரூபா |
|---|---|---|
| 7000/0/0/25003/418 | பொலநறுவை | 3,280,270.37 |
| 7000/0/0/25003/419 | அநுராதபுரம் | 269,035.50 |
| 7000/0/0/25003/420 | அம்பாறை | 456,625.00 |
| 7000/0/0/25003/423 | குருநாகல் | 89,947.12 |
| 7000/0/0/25003/424 | புத்தளம் | 926.50 |
| 7000/0/0/25003/428 | கண்டி | 210,000.00 |
| 7000/0/0/25003/430 | இரத்தினபுரி | 9,252,000.00 |
| **மொத்தம்** | | **13,558,804.49** |

இந்த முற்பணம் வழங்குதல் 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் வருடத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் அந்த முற்பணங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பிரகாரம் முற்பணங்கள் அறவிடுவதனை உரிய காலத்தில் மீளாய்வு செய்யப்படாமையும் அந்த கொள்வனவுகள் மற்றும் விநியோகம் மீளாய்வுகளின்றி இடம்பெறுவதும், அவசர தேவையின் பிரகாரம் கணக்கு வைத்தல் நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிவித்தலின்றி மேற்கொள்ளப்படுவதும் தொடர்புடைய தொகைகளின் விலை ஏற்றத்தாழ்வு அடைவதும், அசாதாரணமான ஏற்றுமதிகள் இடம்பெறுவதும், போக்குவரத்துச் செலவுகளை தாங்கிக் கொள்வதும் சில உத்தியோகத்தர்களின் மோசடி நடவடிக்கைகள் காரணமாகவும் இந்த நிலுவைத் தொகைகள் அறவிடுவது தாமதமடைந்துள்ளது.

**6.2.2** பல்வேறு முற்பணங்கள் வழங்குவதன் கீழ் 2008.06.17 ஆம் திகதி இடம்பெற்ற பிரித்தானிய பவுண் காணாமற் போனமை காரணமாக வெளிநாட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,014,294.68 தொகை இந்த வருடத்தில் தீர்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக திறைசேரி பல்வேறு முற்பணக் கணக்கிற்கு ரூபா 14,573,099.17 தொகையை வைப்புச் செய்வதன் மூலம் மொத்த நிலுவையையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு அரசாங்கங்களில் (சிங்கப்பூர், மலேசிய மற்றும் ஐக்கிய இராச்சியம்) சேவையாற்றி அந்த அரசாங்கங்களிலிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற இலங்கையில் வாழும் ஓய்வூதியக் காரர்களின் விதவைகளின் பொருட்டு ஓய்வூதியச் சம்பளத்தைக் கொடுப்பதற்காக இந்தக் கணக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டிற்குள் ஐக்கிய இராச்சியத்தின் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியக் காரர்களுக்கும் விதவைகளுக்கும் ரூபா 2,579,623.84 தொகையையும் மலேசிய ஓய்வூதியக்காரர்களுக்காக ரூபா 548,880.87 தொகையையும் சிங்கப்பூர் ஓய்வூதியக் காரர்களுக்காக ரூபா 109,407.98 தொகையையும் திணைக்களத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள அதேவேளை அந்த சகல பணத்தையும் தொடர்புடைய அரசாங்கங்களிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்வதன் மூலம் இந்தக் கணக்கைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**6.2.3** திறைசேரியின் பேரேட்டில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கு தொடர்பாக இருந்த கணக்கிலக்கம் 3 இற்குரிய தொழிற்படாத கடன் நிலுவை ரூபா 668,304.13 மற்றும் கணக்கிலக்கம் 9 இற்குரிய செயற்படாத கடன் நிலுவை ரூபா 908,350.15 இந்த வருடத்தில் கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது.

## 7. நிறுவன மற்றும் நிருவாக நடவடிக்கை

### 7.1 பதவியயினர்

2012 ஆம் ஆண்டின் பின்வரும் பதவியினர் 13 ஆம் பக்கத்திலுள்ள நிறுவன ஒழுங்கமைப்பின் பிரகாரம் ஒரே அணியாக நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக பங்களிப்புச் செய்துள்ளனர்.

| | பதவி | உண்மை பதவியினரின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட பதவியினரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 2 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 3 | பணிப்பாளர் | 01 | 03 |
| 4 | பிரதி / உதவி பணிப்பாளர் (இ.கண.சே.) | 06 | 08 |
| 5 | பிரதி / உதவி பணிப்பாளர் (இ.நிரு.சே.) | 01 | 02 |
| 6 | புள்ளிவிபரவியலாளர் | -- | 01 |
| 7 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 |
| 8 | மொழிபெயர்ப்பாளர் | 01 | 01 |
| 9 | தகவல் மற்றம் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 02 | 02 |

| | | | |
|---|---|---|---|
| 10 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 05 | 22 |
| 11 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 13 | 12 |
| 12 | கணினித் தொழில்நுட்ப உதவியாளர் | -- | 01 |
| 13 | சாரதி | 04 | 06 |
| 14 | அலுவலகப் பணி உதவியாளர் | 07 | 08 |
| | ***மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை*** | *43* | *69* |

திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் அதன் நோக்கங்களை வினைத்திறனுடன் அடைந்துகொள்ளும் அபிலாசைகளை 2012 ஆம் ஆண்டு பதவியணியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டிருந்த 80 பதவியினர்களைக் கொண்ட பதவியணி 69 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள வேளையில் சாரதிப் பதவியினரின் எண்ணிக்கை 06 வரையும் அலுவலகப் பணி உதவியாளர் பதவி எண்ணிக்கை 08 வரையும் குறைத்து கணனி தொழில்நுட்ப உதவியாளர் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வினைத்திறனை மேலும் மேம்படுத்துவதற்காக பட்டதாரி பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்து அந்த உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 02 பயிலுனர் பட்டதாரிகள் தற்போது இந்தத் திணைக்களத்தில் இணைந்து சேவையாற்றி வருகின்றனர். திணைக்களத்தின் உள்ளக தகவல் பரிமாற்று முறை மின்னஞ்சல் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து காகிதாதிகள் பாவனை குறைப்பதன் மூலம் (Paperless Culture) வினைத்திறனுடனும் குறைந்த செலவுடனும் திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றக் கூடியதாக இருந்துள்ளது.

# 7.2 நிறுவன ஒழுங்கமைப்பு அட்டவணை



## 7.3 பௌதீக வள அபிவிருத்தி

ஒரு மாடியில் இரண்டு பகுதிகளாக தொழிற்பட்ட இந்தத் திணைக்களத்தின் பணிகள் ஒரு இடத்திற்கு கொண்டுவருவதும், கடமைகளை மேற்கொள்வதற்கு உரிய சூழல் ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் 2012 ஆம் ஆண்டு அரச கணக்குகள் திணைக்களத்தை நவீனமயப்படுத்துவதற்காக கட்டடத் திணைக்களத்திற்கு ரூபா 17,884,155.36 மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஒப்படைப்புடன் திணைக்களத்தின் பணிகள் மூன்று மாடிகளில் தற்காலிகமாக மூன்று இடங்களில் (அறை இல.19, 137 மற்றும் 316) தொழிற்பட நேர்ந்தது. இருப்பினும் திணைக்களத்தின் பணிகள் தடைகள் எதுவுமின்றி சகல திணைக்களத் தலைவர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் செயற்பட்டதன் காரணமாக தடைகளின்றி 2012 ஆம் ஆண்டின் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. அதேபோன்று கடுமையான மேற்பார்வையுடன் மிகவும் சிக்கனத்துடன் மதிப்பீட்டு எல்லையைத் தாண்டிச் செல்லாத வண்ணம் மிகவும் உகந்த சூழலொன்றுக்குள் சேவை செய்யக் கூடிய விதமாக திணைக்களத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதேவேளை அதன் பிரகாரம் 2012.12.31 ஆம் திகதிக்கு முன்னர் நவீனமயப்படுத்தல் பூர்த்தி செய்து 2013 ஆம் ஆண்டில் சகல பதவியினரையும் ஒரு சூழலுக்கு கொண்டுவரக்கூடியதாக இருந்தமை 2012 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட உன்னத பிரதி பலனாகும்.

